செ.வெ.எண் : 57/ ஜூன் நாள் : 30.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

# 2017-18ஆம் ஆண்டில் "கோழி அபிவிருத்தித் திட்டத்தின்" கீழ் மாவட்டத்தில் ரூ.73.2 இலட்சம் மதிப்பில் 160 அலகு நாட்டுக்கோழிப் பண்ணைகள் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு அரசு கோழிப்பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தி வரும் "கோழி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் "இராமநாதபுரம் மாவட்டத்தில் 2017-18ஆம் ஆண்டிற்கு ரூ.73.2 இலட்சம் மதிப்பில் 160 அலகு நாட்டுக்கோழிப் பண்ணைகள் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கோழி வளர்ப்பு ஆர்வமுள்ள நபர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

"கோழி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் "இராமநாதபுரம் மாவட்டத்தில் 2017-18ஆம் ஆண்டிற்கு ரூ.73.2 இலட்சம் மதிப்பில் 160 அலகு நாட்டுக்கோழிப் பண்ணைகள் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகள் / தனிநபர் தொழில் முனைவோர் / சுய உதவிக்குழுக்கள் ஆகியோர் தேர்வு செய்யப்பட தகுதியானவர்கள். கோழிப்பண்ணை அமைக்க போதிய நிலம் விண்ணப்பதாரர் பெயரிலோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருத்தல் வேண்டும். கோழி வளர்ப்பில் முன்அனுபவம் உள்ளவர்களும், கோழி வளர்ப்பில் ஆர்வம் உள்ள விவசாயிகளும் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறலாம்.

பயனாளிகள் தங்கள் சொந்த முதலீட்டில் அல்லது வங்கி மூலம் கடன் பெற்று இத்திட்டத்தின் மூலம் கோழிப்பண்ணை அமைக்கலாம்.

நாட்டுக்கோழிப்பண்ணை 250 / 500 வரை அமைப்பதற்கான கோழிக்கொட்டகை கட்டும் பணி உபகரணங்கள், கோழித்தீவனம், கோழிக்குஞ்சுகள் வாங்குதல், அசோலா உற்பத்தி போன்றவை அமைக்க ஆகும் மொத்த செலவில் 25சதவீதம் முன் மானியம் தமிழக அரசு வழங்குகின்றது.

தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவர் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில் 3 நாட்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும்.

மேற்கூறிய தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் வங்கியிலிருந்து ஒப்புதல் கடிம் அல்லது சொந்த நிதிக்கானச் சான்றுடன் விண்ணப்பங்களை மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, இராமநாதபுரம் / உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, இராமநாதபுரம் / பரமக்குடி அவர்களிடம் உடன் சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**